தலைப்பு 318 - ஊவா மாகாண சபை மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2019 ஆம் ஆண்டு

1. **தொலைநோக்கு செயற்பணி மற்றும் செயற்பாடுகள்**

**1.1 தொலைநோக்கு**

சீரமையான நிலையான அபிவிருத்தியை நோக்கி

**1.2 செயற்பணி**

''மக்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் வினத்திறனுடனும் உற்பத்திதிறனுடனும் நிறைந்த சேவையை வழங்குவதற்காக வளங்களை அணி திரட்டல் மற்றும் உகந்த முறையில் பயன்படுத்தல்''

1.3 **செயற்பாடுகள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுதல்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

ஊவா மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 23,438 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 21,249.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,188.5 மில்லியன் அல்லது தேறிய நிதிஏற்பாட்டில் 9.33 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 19,011 | 19,011 | - | - |
| மூலதனம் | 4,427 | 2,238.5 | 2,188.5 | 49.43 |
| மொத்தம் | 23, 438 | 21,249.5 | 2,188.5 | 9.33 |

3. **கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்து

பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.